மர்ம முகமூடி!

ராணி காமிக்ஸ்

ரூ 1-50

தீபாவளி மலர்

ராணி காமிக்ஸ்—8
(மாதம் இருமுறை இதழ்)

அக்டோபர் 15—31,
1984

மர்ம முகமூடி!

பின்னால் வந்தவன் பெயர் டாலி. இன்னொரு சுரங்க அதிபரும், தங்கும் விடுதியின் உரிமையாளருமான மார்ட்டின் என்பவரின் கையாள்.
நான் தனியாகப் போனால் மார்ட்டின் ஆள் பின்தொடர்வான் என்று தெரிந்தும், பாதுகாப்புக்கு ஆள் இல்லாமல், சுரங்கத்தைவிட்டு வந்தது என் முட்டாள்தனம்தான்!


டாலியின் குதிரை, வண்டியை நெருங்கிவிட்டது.
இனி அவனா நானா என்று பார்க்கவேண்டியதுதான்!


இருவரும் ஒருவரை ஒருவர் முறைத்தார்கள்.
மிஸ்டர் கிராடி! நான் ஏன் வந்திருக்கேன் என்று தெரியுமா?
மார்ட்டின் அனுப்பி இருப்பான்.


மேயர் தேர்தலில் என் முதலாளி மார்ட்டின் போட்டி போடுகிறார். நீர் அவரை எதிர்த்து போட்டியிடும் வேட்பாளருக்கு பணம் செலவழிக்கிறீர். உம் சுரங்க ஆட்களும் எதிராக வேலை செய்கிறார்கள்.

மார்ட்டினை ஆதரிக்க கிராடி மீண்டும் மறுத்தார்.
அதையும் பார்ப்போம்.
அப்படியானால் நீ உயிரோடு இருக்க முடியாது!


கடுவதில் கைதேர்ந்த டாலி முந்திக்கொண்டான்.
உன்னைக் கொல்வதே என் வேலை!

பிணமாக சாய்ந்த கிராடியின் மணிபர்சை டாலி எடுத்தான்.
இந்தக் கொலையால் ஏதாவது கஷ்டம் வந்தால் சமாளிக்க இது உதவும்!

பிறகு டாலி, சவுக்கால் குதிரைகளை ஓங்கி அடித்தான். சாரட்டு பாய்ந்து சென்றது.


என் முதலாளிக்கு எதிரான ஓட்டு ஒன்று குறைந்தது!


பிறகு டாலி, அவன் முதலாளி மார்ட்டின்
மறைந்திருந்த இடத்துக்கு போய்—
அவன் பர்சை எடுத்துக் கொண்டேன் பாஸ்.
அதனால் கொள்ளைக்காக நடந்த கொலை போல் ஆகிவிடும்!

அன்று மாலை, கொல்லப்பட்ட இராடியின் சுரங்கத்தில் மர்ம வெடி விபத்து நடந்தது. பலர் இறந்தனர்.


அதை மார்ட்டினும், டாலியும் பார்த்தனர்.
எனக்கு எதிரான பல ஓட்டுகள் முடிந்தன. இனி அந்த சுரங்கத்தையும் மலிவா வாங்கிடுவேன்.

ரோடி இறந்தது, அவர் சுரங்கத்தில் விபத்து ஏற்பட்டது பற்றியே கொஞ்ச நாள் காப்பர் பால்ஸ் நகரில் பேச்சாக இருந்தது. அங்குள்ள ஒரு கடையில், மேய்ச்சல் நில அதிபர் கில், தன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது மார்ட்டினும், டாலியும் நுழைந்தனர்.
நண்பர்களே! பார்பர் ஷாப் போய்விட்டு, வீடு திரும்புகிறேன். குட் பை!


மேய்ச்சல் நில அதிபரை, மார்ட்டின் நிறுத்தினார்.
அலோ கில், நலமா? மேயர் தேர்தலில் நிற்கிறேன். ஆதரவு தரணும்.

அந்தக் கடையும் மார்ட்டினுக்கு சொந்தமானதே. மேயர் தேர்தலில் ஜெயித்து, மேலும் பணம் சேர்க்க மார்ட்டின் திட்டமிடுவது கிழவர் கில்லுக்கு புரிந்தது!

மார்ட்டின் நடவடிக்கைகள் கில்லுக்கு பிடிக்காது. அதனால் அவர் பதில் சொல்லவில்லை.
நம்ம கில், மார்ட்டினை ஆதரிப்பாரு?
மிஸ்டர் கில்! என் ஓட்டல் "அதிர்ஷ்ட தேவதை"க்கு வாருங்களேன்! சாப்பிட்டுவிட்டு போகலாம்!
நீங்கள் என்னை ஆதரித்தால் நான் ஜெயிப்பது நிச்சயமாகி விடும். நான் மேயரானதும் டாலியை காப்பர் பாங்கக்கு ஷெரீப் ஆக்குவேன், அவன் உங்களுக்கு உதவுவான்.
மேய்ச்சல் நில அதிபர் கில் மசியவில்லை.
தேர்தலில் யாரை ஆதரிக்கணும் என்று எனக்கு தெரியும்.


கிழவர் கில் தன்னை ஆதரிக்கமாட்டார் என்று அறிந்து மார்ட்டின் ஆத்திரம் அடைந்தார்.
கிழவன் வழிக்கு வரமாட்டான்! இனி நீங்க கைவரிசையை காட்டுங்க!
சரி பாஸ்!


அரை மணி நேரம் கழித்து, பார்பர் ஷாப்பில் இருந்து கில் வெளியே வந்தபோது, மார்ட்டின் ஆட்கள் இரண்டு பேர் காத்திருந்தனர்!
பார்பர் ஷாப்
BA BER
கிழவனுக்கு பாடம் புகட்டுவோம்!

மேய்ச்சல் நில அதிபர் நடந்து போய்க்கொண்டிருந்தபோது, ஒருவன் அவர் காலை தட்டிவிட்டான்.
கிழப்பயலே! விழுந்து சாகு!

கிழவர், ஆத்திரத்துடன் அவர்களை முறைத்தார்.
என்ன திமிர் இருந்தா, என்னை தட்டிவிடுவாய்.
கிழவா! உனக்குதான் திமிர்!

ஆத்திரம் கொண்ட இருவர் அவர்கள் மீது பாய்ந்தார்.
உங்களைப் போல ரவுடிகளை விட்டு வைத்தால், நல்லவங்க நடமாட முடியாது.

ஆனால் மார்ட்டின் கையாட்கள் இருவரை பயங்கரமாக தாக்கினர்.
இதோடு தொலைந்து போ.


கிழவர் கீழே விழுந்ததும் ஒருவன் பூட்சில் உள்ள குதிமுள்ளால் அவர் கையை கிழித்தான்.
கிழவா! வாயை மூடாவிட்டால் உன் முகத்தையும் கிழிப்பேன்.
ஆ! ரத்தம்! காயம்!

ஆத்திரத்துடன் எழுந்த கிழவர் துப்பாக்கியை தூக்கினார்.
உங்களுக்கு பாடம் புகட்டாமல் விடமாட்டேன்.

மேய்ச்சல் நில அதிபர் கில்லின் மகன் ரிட்சியும் அன்றைக்கு காப்பர் பால்ஸ் வந்திருந்தான். மாவீரனும் தைரியசாலியுமான அவன், அப்போது அந்த இடம் வந்தான்.
ஆ! அப்பாவை ரவுடி பசங்கள் அடிக்கிறாங்களே!
THE BON
HO
OON


ரிட்சி அருகில் வந்ததும், ஒருவன் மீது கயிற்றை வீசினான்.
அப்பா! இவர்களை என்னிடம் விட்டுவிடுங்கள்.
ரிட்சி! விடாதே!
DEALER

ரிட்சி, கயிற்றால் கட்டி ஒருவனை இழுத்தான்.
நீ துப்பாக்கியை கீழே போடு!

ரிட்சி, அந்த ரவுடியை தரதர என்று இழுத்து வட்டமடித்தான்.
எப்படி நடக்கணும்னு இனி தெரிஞ்சுக்கோ.


ஒரு ரவுடியை பல தடவை இழுத்து சுற்றி உருட்டிவிட்ட ரிட்சி அடுத்த ரவுடியை எதிர்கொண்டான்.
என் தந்தையை தாக்கிய தடியா! மோதிப் பார் என்னுடன்!

ரிட்சியை ரவுடி குறிபார்த்தான். ஆனால் அதற்குள் ரிட்சி மின்னல் வேகத்தில் துப்பாக்கியை எடுத்து சுட்டான்.


தன் தகப்பனுரை காயப்படுத்தியவன் காலெ ரிட்சி சுட்டான். ரவுடி மேலே குதித்து தப்பினன்.
ஓகோ! மேலே குதித்து நடனம் ஆடுகிறயா?

ரிட்சி துப்பாக்கியை உறையில் போட்டு விட்டு பாய்ந்தான்.
இனி உனக்கு பாடம் புகட்டுறேன்.


பாய்ந்த வேகத்தில் ஒரு குத்துவிட்டான், ரிட்டி.
ஆ!
உன் எலும்பை முறிக்காமல் விடமாட்டேன்.

ரிட்டி, ரவுடிகள் இருவரையும் கட்டி தூக்கினான்.
பார்பர் ஷாப் முன்னால் நல்ல அலங்காரம்!
SHOP
வம்பு பண்ணினால் இதுதான் பரிசு!

மார்ட்டின்,
தன் கையாள் டாஸியுடன் வந்து
கும்பலுடன்சேர்ந்துகொண்டார்.
நகர காவல் தலைவர் ஷெரீப்,
முன்னால் வந்தார்.
என் கடைமுன் வம்பு வேண்டாம்.
பயப்படாதே. அவங்க நல்லாவே இருக்காங்க.

மிஸ்டர் என்ன தகராறு? யாரு ஆரம்பிச்சது?
நாங்க இல்லே. இவர்கள் தான்.

விசாரணையில் மார்ட்டின் குறுக்கிட்டார்.
ஷெரீப்! மேய்ச்சல் நில ஆட்கள் நகரத்துக்கு வந்து கலாட்டா செய்வதை தடுக்கணும்.
நான் ஷெரீப் ஆனதும் இந்த நகரை அமைதிப் படுத்துவேன்.

அதைக் கேட்ட ரிட்சி, கலாட்டாவுக்கு பின்னால் மார்ட்டினும், டாலியும் இருப்பதை புரிந்துகொண்டான்.
அப்பா! நடந்ததை ஷெரீப்பிடம் கூறுங்கள்
சும்மா நடந்துபோன என்னை காலை தட்டிவிட்டு, கையை காயப்படுத்தியது ரவுடிகள்தான்.

எனக்கும் மார்ட்டினுக்கும் தேர்தல் குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் எதிரொலிதான் இது.
இருக்கும்.
அந்த ரவுடிகள் உங்க அடியாட்கள்தானே மிஸ்டர் மார்ட்டின்?
நல்ல கதை இது! நானா அடிக்கச் சொன்னேன்? அபாண்டம். ஷெரீப் நான் போகிறேன்.
பேசும்போது முன் ஜாக்கிரதையாய் பேசணும்.
என் அப்பாவிடம் மோதும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்.
சரி விடு தம்பி! நடந்தது போகட்டும்.

இரண்டு பேர்களையும் கட்டித் தூக்கி இருந்த கயிற்றை டாலி வெட்டிவிட்டான்.
ஐயோ!
டாலி! கயிறு என்னுடையது. தந்துவிடு!

கயிற்றை கொடுத்தபிறகு, கீழே கிடந்த ரவுடியை டாலி உலுப்பி தூக்கிவிட்டான்.
அப்பா! காயம். ஆழமா இருக்கு. டாக்டரிடம் காட்டணும்.
ஆமா! பில்லை மார்ட்டினுக்கு அனுப்பிடலாம்.


மேய்ச்சல் நில அதிபர் இல்லூம். அவர் மகள் ரிட்சியும் டாக்டர் வாரன் வீட்டுக்கு வந்தனர்.
மார்ட்டினுக்கு ஓட்டுப் போடமாட்டேன் என்றதால் என்னைத் தாக்கினார்கள்.
அது உண்மையானால் நாம் எச்சரிக்கையாக இருக்கணும். இல்லாவிட்டால் நம் பண்ணைக்கு தீ வைத்துவிடுவார்கள்.


மகள் வாராவின் உதவியுடன் கட்டு போட்டார்.
டாக்டர்! மார்ட்டின் தனக்கு ஓட்டுப் போடணும் என்பதற்காக எல்லோரையும் இம்சைபடுத்துகிறான். நாம அதுக்கு ஏதாவது செய்யணும்.

மார்ட்டின் மீது டாக்டருக்கும் கோபம்.
மிஸ்டர் கில்!
கவர்னருக்கு எழுதி இருக்கிறேன். வன்முறையை கவர்னர் அனுமதிக்க மாட்டார். இதை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை அனுப்புகிறார். இதை யாரிடமும் சொல்லாதீங்க.

அப்பா! இதை நீங்க சொல்லியிருக்கக் கூடாது. இது வெளியே தெரிந்தால் நமக்குதான் ஆபத்து.

லாரா! கில்லும் ரிட்சியும் நம்பிக்கைக்கு உரியவர்கள்.
மிஸ் லாரா! நாங்கள் இதை வெளியில் சொல்லமாட்டோம். உங்களுக்கு ஆபத்து என்றால் நான் சும்மா இருக்கமாட்டேன்.

அன்றிரவு தன் ஆட்கள் கூட்டத்தை மார்ட்டின் கூட்டினார்.
கிழவன் கில்லின் பண்ணையை நொறுக்கணும்
அது அவ்வளவு சுலபமல்ல. கிழவனின் மகன் பொல்லாதவன்.
அவர்களிடம் நிறைய ஆட்களும் உள்ளனர்.

ஆனால் மார்ட்டின் கேட்கவில்லை.
எப்படியாவது கிழவனைத் தீர்த்துகட்டணும். தூரத்தில் இருந்து சுடுங்கள்.

மேயர் தேர்தலில் நான் ஜெயிக்கணும். நான் மேயராகிவிட்டால், சகல அதிகாரமும் என் கையில். சுற்றி உள்ள நிலங்கள் எனக்கு கிடைக்கும். உங்கள் எல்லோருக்கும் நிறைய பணம் கொடுப்பேன்.

மறுநாள் முகமூடிகள் தாக்குதல் தொடங்கியது.
மேயர் தேர்தலில் மார்ட்டினுக்கு ஓட்டுப் போடு. இல்லே...
நீங்க சொல்றபடி செய்றேன். என்னே விட்டுடுங்க.

சொல்றபடி இங்குள்ளவங்க ஓட்டுப் போடணும். இல்லே தொலைஞ்சீங்க.


ஆனால் இன்னொரு கிராமத்தில் மார்ட்டின் ஆட்களுக்கு எதிர்ப்பு.
யாருக்கு ஓட்டுப் போடணும் அப்படின்னு எங்களுக்குத் தெரியும்.
நாங்கள் சொன்னபடி செய்யாவிட்டால் இந்தக் கிராமத்தையே கொளுத்திவிடுவோம்.

அன்றிரவு அந்த கிராமத்தில் தீ...
தானியக் கிடங்கை காப்பாற்ற முடியாது. வீட்டையாவது காப்போம்.
இது மார்ட்டின் ஆட்கள் வேலை தான்.

தானியக் கிடங்கை தீக்கு பறிகொடுத்த மக்கள் தவித்தார்கள்.
தீ வைத்தது யார் என்று நிரூபிக்க முடியாது. ஆனா, மார்ட்டினுக்கு எதிரா நாம் நிற்போம்.
சில நாள் கழித்து, நகர ஷெரீப் சுவர்களில் ஒரு அறிக்கையை ஒட்டினார்.
இது மார்ட்டினுக்கும், அவர் ஆட்களுக்கும் எதிரான நடவடிக்கை.
ஆமாம், வேறு யாருக்கு எதிரானது.
அந்த அறிவிப்பு, மாநில கவர்னர் கையெழுத்துடன் வந்திருந்தது.
காப்பர் பால்ஸ் மக்களுக்கு அறிவிப்பு!
நகர மேயர் தேர்தலில், வாக்காளர்களை தங்கள் வசப்படுத்த, சட்ட விரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல் வந்துள்ளது. அதுபற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நகருக்கு அரசு அனுப்பிவைக்கும். ஆதாரம் உள்ளவர்கள் அவர்கள் முன் சாட்சி சொல்ல வேண்டும்.
ஒப்பம்.
மாநில கவர்னர்.

கொஞ்ச நேரத்தில் மார்ட்டின் தன் வக்கீல் ஆபீசுக்குள் புகுந்தார்.
எனக்கு எதிரா விசாரணை. யாரோ இங்கிருந்து தகவல் கொடுத்து இருக்காங்க
அப்படித்தான் தெரியுது.
தகவல் கொடுத்தது யார் என்று எனக்குத் தெரியணும். தலைநகருக்கு போங்க. அரசாங்க தலைமை வக்கீலைப் பாருங்க. செல்வாக்கை பயன்படுத்தி யாருன்னு கண்டுபிடியுங்க.
அது சிரமமானது ரகசியமா வச்சிருப்பாங்க. என்றாலும் முயல்கிறேன்.
குள்ளநரித்தனம் மிக்க அந்த வக்கீல் தலைநகருக்கு போய் இரண்டு நாளில் திரும்பி வந்தார்.
வக்கீல் சார்! காயா, பழமா?
ஒரு குமாஸ்தாவுக்கு லஞ்சம் கொடுத்து தகவலை எடுத்தேன்.

மார்ட்டின் காதில் வக்கீல் கிசுகிசுத்தார்.
கவர்னருக்கு தகவல் கொடுத்தது. டாக்டர் வாரன் விசாரணை குழு இன்று புறப்படுகிறது.
அப்போ நாம் வேகமா செயல் படணும்.

மார்ட்டின் அவரது ஓட்டல் அதிர்ஷ்டதேவதைக்கு டாலியை வரவழைத்தார். வக்கீலும் இருந்தார்.
கிராமவாசிகள் இடையே பீதியை ஏற்படுத்திவிட்டோம். அவங்க சாட்சி சொல்ல மாட்டாங்க. ஆனா அந்த டாக்டர் அப்படி அல்ல. அவர் மரியாதைக்கு உரியவர். அவர் சொல்வதை விசாரணைக் குழு கேட்கும்.


டாலி, உடனே துப்பாக்கியை எடுத்தான்.
துப்பாக்கி வேண்டாம்.
நீ டாக்டரை கட்டுக் கொன்றால், அவர் தகவல் ஊர்ஜிதம் ஆகிவிடும். கவர்னர் கோபப்படுவார். வேறு வழி பார்.

பிறகு வக்கீல் ஒரு திட்டத்தை சொன்னார்.
டாலி! அதோ, டாக்டர் வாரனின் மகள் லாரா
பாஸ்! கச்சிதமாக முடித்து விடுகிறேன்.


லாரா, சாரட்டு வண்டியில் போவதை இருவரும் பார்த்தனர்.
டாலி! லாரா. தினமும் இப்படி நோயாளிகளுக்கு மருந்து எடுத்துச் செல்வது வழக்கம் இவளை வைத்து டாக்டர் வாயை அடக்கணும்.

அன்று மாலை...லாராவை மார்ட்டினின் ஆட்கள் சூழ்ந்தனர்.
மிஸ் லாரா! நிறுத்து!


லாரா பயப்படாமல் சவுக்கை எடுத்தாள்.
நீங்கள் யார் ஆட்கள் என்று எனக்குத் தெரியும். உம், ஒதுங்குங்கள்.
லாரா வம்பு செய்யாமல் எங்களுடன் வந்துவிடு. இல்லாவிட்டால்...

லாரா சவுக்கால் அடித்தாள்.
விலகிப் போ, நாயே!
உன்னை என்ன செய்கிறேன் பார்.

லாரா, குதிரையை முடுக்கிவிட்டு பாய்ந்தாள். ஆனால் முகமூடிகள் அவளை விடவில்லை.
வண்டியில் ஏறு! குதிரையை நிறுத்து!


ஒரு முகமூடி வண்டியில் ஏறி, லாராவை பிடித்துக்கொண்டான்.
உன்னைக் காயப்படுத்த வேண்டாம் என நினைக்கிறோம். ரொம்ப துள்ளாதே.

லாராவால் போராட முடியவில்லை. அவள் கைகள் பின்னால் கட்டப்பட்டன.
கொஞ்ச நாளைக்கு உன்னைத் தனியா அடைச்சு வைத்தால் எல்லாம் சரியாப் போயிடும்.

டாக்டர் வாரனிடம் ஒரு சிறுவன் ஒரு கடிதத்தை கொடுத்தான்.
டாக்டர்! உங்களிடம் இதை கொடுக்கும்படி ஒருவர் கொடுத்தார்.
அதை அவரே என்னிடம் கொடுத்திருக்கலாமே! விசித்திரமா இருக்கு! சரி, நீ போ!
ஆஸ்பத்திரியில் கடிதத்தை படித்தார். ஆத்திரமும் பயமும் அவரை அலைக்கழித்தன.
வாரா பயந்தபடி நடந்துவிட்டதே. நான் யாரிடமும் சொல்லி இருக்கக் கூடாது.
அந்த மொட்டைக் கடிதத்தை அவர் மீண்டும் படித்தார்.
உங்கள் மகள் எங்கள் கைதியாக பாதுகாப்பாக இருக்கிறாள். அவள் உயிரோடு திரும்பி வர வேண்டும் என்றால் சாட்சி சொல்லாதீர். இது ரகசியம்!
இப்படிக்கு,

ஆத்திரம் அடைந்த டாக்டர் உடனே ஷெரீப்பை பார்க்க திட்டமிட்டார். பிறகு வாராவின் உயிருக்கு பயந்து அதை கைவிட்டார். நோயாளியைப் பார்க்க போவது போல் அவர் புறப்பட்டார்.

மேய்ச்சல் நில அதிபர் "பில்" லின் பண்ணைக்கு டாக்டர் கோபமாக வந்தார்.
உம் மீது நம்பிக்கை வைத்து விசாரணைக் கமிஷன் பற்றி சொன்னேன். நீர், ரகசியத்தைக் காப்பாற்றவில்லை.
டாக்டர்! நீங்க என்ன சொல்றீங்க?
வாரா சிறைப் பிடிக்கப்பட்ட விவரத்தை டாக்டர் விவரித்தார்.
காவல் தலைவர் ஷெரீப்பிடம் புகார் செய்யமுடியாமலும், விசாரணைக் கமிஷனிடம் சாட்சி சொல்ல முடியாமலும் செய்துவிட்டார்கள்.
நானோ, என் மகன் ரிட்சியோ, ரகசியத்தை வெளியிடவில்லை. எங்களை நம்புங்கள்!
டாக்டருக்கு ரிட்சி தைரியமூட்டினான்.
உங்கள் வாயை அவர்கள் அடைக்கலாம். ஆனால் என் கைகளைக் கட்ட முடியாது.

டாக்டர்! நீங்கள் அமைதியா இருங்க உங்க வாயை அடைத்துவிட்டதாக மார்ட்டின் நினைக்கட்டும்.
மற்றவற்றை ரிட்சி பார்த்துக்கொள்வான் லாராவைக் காப்பாற்றுவது அவன் பொறுப்பு.
மறுநாள். அராஜகம் குறித்து விசாரணை நடத்த கவர்னரால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் காப்பர் பால்ஸ் நகரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.
உம் நீ காவலாளியைச் சுடு. நான் வண்டி ஓட்டியைக் கவனிக்கிறேன்.

காவலாளியும். வண்டிக்காரனும் வீழ்த்தப்பட்டனர்.
குறி தவறவில்லை

சாரட்டு வண்டியை நோக்கி முகமூடிகள் பாய்ந்தனர்.
இதோ, முகமூடிகள் அட்டகாசம்.
சுற்றி வளையுங்கள்.

உங்கள்
பொருட்களுடன்
வெளியே
வாருங்கள்.
இது
சட்டவிரோதம்.


மூவரும் வண்டியைவிட்டு இறங்கினார்கள்.
முகமூடிகளே! எங்களைக் கொள்ளை அடித்தால் சும்மா விடமாட்டோம்.
வாயை மூடு! உங்களுக்கு இங்கு வேலை இல்லை. மூட்டை முடிச்சுகளுடன் நடங்கள்.

விசாரணைக் கமிஷனை பயமுறுத்த ஒரு முகமூடி துப்பாக்கியால் சுட்டான்.
உங்களுக்கு அழிவு காலம் வந்துவிட்டது.
காப்பர் பால்சுக்கு நடந்தே போங்கள்!


அதிர்ச்சியோடும், ஆத்திரத்தோடும் மூவரும் நடந்தனர்.
காப்பர் பால்சில், சட்டம்—ஒழுங்கு செத்துவிட்டது என்பதற்கு இதைவிட ஆதாரம் வேண்டுமா?
விசாரணையில் அதை வலியுறுத்தி, கவர்னரிடம் சொல்லுவோம்.


சாரட்டு வண்டியில் இருந்து குதிரைகளை முகமூடிகள் அவிழ்த்துவிட்டார்கள். பிறகு, வண்டியை மலைச்சரிவில் உருட்டிவிட்டனர்.
சரி வாருங்கள்! நம் வேலை முடிந்தது.


விசாரணைக் கமிஷனைச் சேர்ந்தவர்கள் கடும் வெயிலில் நடந்து கொண்டிருந்தபோது...
கனவான்களே! எங்கே இப்படி நடந்தே போகிறீர்கள்?
முகமூடிகளின் அட்டூழியத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். காப்பர் பால்ஸ் செல்ல உதவுவீர்களா?

தன்னை நல்லவன் போல் காட்ட மார்ட்டின், மூன்று பேர்களையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு, காப்பர் பால்ஸ் திரும்பினார்.
உங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்கு காப்பர் பால்ஸ் மக்கள் சார்பில் நான் மன்னிப்பு கேட்கிறேன். இங்கே சட்டம்—ஒழுங்கு இப்படி இருக்கு!

நான் மேயர் தேர்தலில் போட்டியிடுகிறேன். நான் மேயரானால் சட்டத்தைக் காப்பாற்றுவேன். ஒரு பலமான ஷெரீப்பை நியமித்து, அவருக்கு பக்கபலமாக இருப்பேன்.
உங்களைப் பாராட்டுகிறேன். இந்த ரவுடிகளின் கொட்டத்தை அடக்கியே தீரணும்!


மார்ட்டின், ஓட்டல் அதிர்ஷ்ட தேவதை முன் வண்டியை நிறுத்தினார்.
கனவான்களே! இது என் ஓட்டல். நீங்கள் இங்கேயே தங்கலாம். உங்கள் விசாரணைக்கு, தனியா ஒரு அறை ஏற்பாடு செய்கிறேன்.
ஓட்டல் அதிர்ஷ்ட தேவதை
உங்கள் பெருந்தன்மைக்கு நன்றி.

தன் ஓட்டலில் விசாரணை கமிஷன் ஆட்களை தங்கவைப்பதன் மூலம், யாரும் சாட்சி சொல்லாமல் தடுத்துவிட மார்ட்டின் திட்டமிட்டிருந்தார். இந்த சதியை அன்றிரவு காப்பர் பால்ஸ் நகரத்துக்கு வந்த ரீட்சி புரிந்துகொண்டான்.
அதிர்ஷ்ட தேவதை
மார்ட்டினின் சுயரூபம் தெரியாமல் விசாரணைக் குழுவினர் இங்கு வந்து மாட்டிக் கொண்டார்களே!

ஓட்டலுக்குள் வந்த ரிட்சி, விசாரணைக் குழுவினரிடம் வந்தான்.
இன்று சாட்சி சொல்ல ஒரு ஆள் கூட வரவில்லை.
நீங்க இங்கே இருக்கும்வரை யாரும் வரமாட்டாங்க.

டாலி! ரிட்சியை நைசா வெளியேற்று. துப்பாக்கி வேண்டாம்
அவனை நான் பாத்துக்கறேன்!

தம்பி! நீ என்ன சொல்றே?
அதாவது இங்கே...
ஏ ரிட்சி! வெளியே போ!

ஆத்திரத்துடன் ரிட்சி, டாலி பக்கம் திரும்பினான்.
நான் வெளியே போகணுமா? யார் அதைச் சொல்றது?
உன்னை வெளியே போகச் சொல்ல ஓட்டல் அதிபருக்கு உரிமை இருக்கு. குழப்பம் விளைவிப்பவனுக்கு இங்கு இடமில்லை!

ரிட்சி அமைதியாக பதிலளித்தான்.
யார் குழப்பம் விளைவிப்பவன்?
நீ தானடா!
திடீர் என்று டாலி தாக்கினான்.
நீயா போறியா இல்லை...
கீழே விழுந்த ரிட்சி, எழுந்து கொண்டு திருப்பித் தாக்கினான்.
நான் போவதற்குள், உனக்கு பாடம் கற்பிக்கிறேன்.

அந்த ஓட்டலில் இதுவரை அப்படி ஒரு மோதல் நடந்தது இல்லை. ரிட்சி கீழே விழுந்தான்.
கனவான்களே! பார்த்தீர்களா! இங்கு சட்டம் இல்லை. டாலி அவனை விடமாட்டான்.

ஆனால் கொஞ்ச நேரத்தில், ரிட்சி டாலியை துவைக்க ஆரம்பித்தான்.

ரிட்சியின் மின்னல் வேக தாக்குதலை சமாளிக்க முடியாமல் டாலி சுருண்டு விழுந்தான்.
இப்போது ரிட்சியை தெரிஞ்சுக்கோ.

டாலி கீழே விழும்போது, அவன் பையில் இருந்து ஒரு மணிபர்ஸ் கீழே விழுந்தது. அதை ரிட்சி எடுத்துப் பார்த்தான்.
இது கொலை செய்யப்பட்ட கிராடியின் மணிபர்ஸ்.
டாலி! எழுந்திரு! அவனை விடாதே!
கிராடி

அந்த மணிபர்சை, ரிட்சி பைக்குள் வைத்துக் கொண்டான். பிறகு நமுட்டு சிரிப்புடன்...
நான் இந்த ஓட்டலில் சாப்பிடக் கூடாது, அவ்வளவு தானே. இதோ போகிறேன்.

ரிட்சி குதிரையில் ஏறி வேகமாக ஷெரீப் அலுவலகம் வந்தான்.
டாலிக்கு எதிரா நல்ல தடயம் கிடைச்சிருக்கு. விடக்கூடாது.


சாரட்டு வண்டி நொறுக்கப்பட்டது. வண்டி ஓட்டி கொல்லப்பட்டது ஆகியவை பற்றி விசாரணை நடத்திவிட்டு ஷெரீப் அப்போது தான் திரும்பி இருந்தார். அவரிடம் டாலி பற்றி ரிட்சி புகார் செய்தான்.
இதை வைத்து டாலிதான் கொலையாளி என்று சொல்ல முடியாதே.
கொலை நடந்தப்போ அங்கே இருந்திருக்கிறான் என்பதுக்கு இது ஆதாரம்.

சுரங்க அதிபரைக் கொன்றது; லாராவைக் கடத்தியது, வண்டி ஓட்டியைக் கொன்றது எல்லாம் மார்ட்டின் ஆட்கள்தான் என்பதுக்கு தக்க ஆதாரம் இல்லாமல் மார்ட்டினை கைது செய்ய முடியாது.
500 டாலர் பரிசு!
பீட்டர்

ஷெரீப் கூறியதைக் கேட்டு ரிட்சி ஆத்திரம் அடைந்தான்.
WANTED
மணிபர்சை வைத்திருங்கள்! வேறு ஆதாரம் கொண்டு வருகிறேன்.

மறுநாள் காலை, மணிபர்சை ரிட்சி எடுத்து, அதை ஷெரீப்பிடம் கொடுத்தது எதுவும் மார்ட்டினுக்கும் டாலிக்கும் தெரியாது.
பாஸ்! எப்படியாவது ரிட்சியை அடக்குவேன்.
உன் வாயை மூடு!


தன் பண்ணையில் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படும் வேலியை நீட்டி பார்த்துக்கொண்டு சென்றான்.
மார்ட்டின் ஆட்களால் எப்போதும் ஆபத்து காத்திருக்கு.

மேலே, பாறையில் 3 பேர் அவனை குறிவைத்தார்கள்.
தயாரா இருங்க. அவன் திரும்பும்போது சுடணும்.

ரிட்சியின் பண்ணை ஆட்கள், தங்களை குறிவைப்பதை அந்த மூவரும் அறிந்திருக்கவில்லை!
நாம் முந்திக் கொள்ளனும்.

திடீர் என்று பாய்ந்த குண்டுகள் இருவரை பலிவாங்கியது.
ரிட்சியின் வலையில் மாட்டிக்கொண்டோம்.

ரிட்சி பாய்ந்து போய், மீதி இருந்தவனைச் சுட்டான்.
இவனை உயிரோடு பிடிக்கணும்.

ஆனால் அவன் தப்பி ஓடிவிட்டான்.
இவர்களை என்ன செய்யணுமோ, செய்யுங்க. நான் தப்பி ஓடறவனைப் பின்தொடர்-கிறேன்.

தப்பி ஓடியவனை ரிட்சி நீண்டதூரம் பின்தொடர வேண்டியதாயிற்று.
அவன் நேரே மார்ட்டின் வீடு போய் சேருவானு? உம்... பார்ப்போம்!

தப்பி வந்தவன், மலை அடிவாரத்தில் உள்ள ஒரு வீட்டை அடைந்தான்.
நல்லவேளை அவன் என்னை திரும்பி பார்க்கவில்லை


ரிட்சி, குதிரையை மரத்தில் கட்டிவிட்டு, மெள்ள வந்தான்.
தண்ணீர் வேண்டாம்! நாம் மோதும் நேரம் வந்துவிட்டது.

அவன் துப்பாக்கியை எடுப்பதற்குள் ரிட்சி சுட்டான்.
உம்... அடுத்து என்ன?


யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டு ரிட்சி மறைந்துகொண்டான்.
ஏய் மிஸ்டர்! துப்பாக்கியை கீழே போடு!

ஆனால் அவன் துப்பாக்கியை கீழே போடவில்லை.
உன்னை சுடுவதைத் தவிர வேறு வழி இல்லை.


பிறகு, அந்த வீட்டுக்குள் ரிட்சி நுழைந்தான். அங்கே துப்பாக்கியுடன் இருந்தவன் மீது பாய்ந்தான்.
உன்னையாவது உயிரோடு பிடிக்கணும்.

நடுங்கிக்கொண்டிருந்த அந்த ஆளை ரிட்சி மிரட்டினான்.
யார் ஆள் நீ? சொல்; இல்லாவிட்டால் உன் மண்டையை குண்டு துளைக்கும்.
மார்ட்டினுக்காக டாலிதான் பணம் கொடுத்து எங்களை வைத்திருக்கான்.


பிறகு அவன் தலையில் ரிட்சி துப்பாக்கியால் அடித்து மயக்கம் அடையச் செய்தான்.
ஓ! ரிட்சி! நல்லவேளை வந்தீர்கள்.
லாரா! உங்களைக் காட்டி கொடுப்பவர்கள் அல்ல நாங்கள்.


லாராவையும் உயிரோடு இருக்கும் டாவியின் ஆளையும் ரிட்சி தன் பண்ணையில் விட்டான். பிறகு தன் ஆட்கள் நால்வருடன் ஜம்பர் பால்ஸ் வந்தான்.
நமது இறுதிகட்ட நடவடிக்கை இது. ஷெரீப்பை நம்ப வைக்க, சட்டப்படி செய்யணும்.

ஷெரீப்பை சந்தித்து நடந்ததை விளக்கினான்.
டாலியையும் மார்ட்டினையும் கைது செய்ய உங்களுக்கு உதவி தேவை. அதுக்கு நாங்க 5 பேர் தயார்.
ரிட்சி வா! இப்போதே போவோம்.

ரிட்சியும் அவன் ஆட்களும் அரசாங்க நட்சத்திரத்தை அணிந்து, ஷெரீப்புடன் ஓட்டல் அதிர்ஷ்டதேவதைக்கு வந்தனர்.
மார்ட்டின்! சுரங்க அதிபர் இராடி கொலைக்காக உம்மை கைது செய்கிறேன்.
நீர் சொல்வது பொய்!

ஷெரீப், அடுத்து டாலி மீது குற்றம்சாட்டினர்.
லாராவை கடத்திச் சென்றதற்காக டாலியை கைது செய்கிறேன்.


அப்போது மார்ட்டின், பின்புறம் வழியாக நழுவினர்.
அந்த முட்டாள் டாலி, ரொடியின் மணிபர்சை வைத்திருந்ததால் வந்த வினை இது!

டாலியும் அவன் ஆட்களும் துப்பாக்கியை எடுக்கும்போது...
டாலி! இனி நீ தப்ப முடியாது.


டாலி விழுந்து கிடந்த இடம் அருகே ரிட்ஜியும், ஷெரீப்பும் வந்தார்கள்.
டாலி இறந்துவிட்டான். தனி மனிதன் துப்பாக்கி திரைத்தனம் முடிந்துவிட்டது.
மார்ட்டின் இனி மேயராக முடியாது.



ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர். ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091,பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம், ராணி அச்சகம்,1091,பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

அணைக்கட்டு— கொலைகள்!

சித்ரா மணாளன்

1. என்ஜினீயர் கொலை!

செப்டம்பர் மாதம் ஒருநாள் காலை—

அதிக குளிரில் அந்த மலைப் பிராந்தியம், நடுங்கிக் கொண்டிருந்தது.

ஆள் நடமாட்டமே இல்லை.

அந்த மலைப் பகுதியில் எப்போதுமே ஆள் நடமாட்டம் குறைவு.

மலையின் மேலே அணை கட்ட ஆரம்பித்தார்கள்.

அதன் காரணமாக நடமாட்டம் இருந்தது.

இப்போது அணை கட்டும் வேலை நின்றுவிட்டதால் அந்த நடமாட்டமும் இல்லை.

மேடு பள்ளமான அந்த ரோட்டில், காலையில் ஒரு பஸ் வரும். மாலையில் ஒரு பஸ் வரும். வேறு போக்குவரத்து வசதியே கிடையாது. பக்கத்தில் ஊரும் கிடையாது.

பஸ் நிற்கும் இடத்தின் அருகே ஒரு ஜீப் வந்து நின்றது. ஜீப்பை டிரைவர் சின்னு ஓட்டி வந்தான்.

ஜீப்பில் பிச்சை என்ற பிச்சையா உட்கார்ந்து இருந்தான்.

அணையை கட்டும் அரசாங்க இலாகாவைச் சேர்ந்த ஜீப் அது. கட்டுமான பொறுப்பு என்ஜினீயர் பயன்படுத்துவதற்காக அந்த ஜீப் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த என்ஜினீயரின் பியூன் பிச்சை. இன்று புது என்ஜினீயர் வருகிறார். அவரை அழைத்துச் செல்வதற்காக பிச்சையும் சின்னுவும் வந்து இருக்கிறார்கள்.

அந்த அணைக்கட்டு கட்டத் தொடங்கி ரொம்ப நாளாச்சு. சிறிய அணைதான். ஆனால் வேலைதான் முடிந்தபாடில்லை.

காரணம்?

காரணம், பயங்கரமானது. பலர் நம்ப மறுப்பது, அரசாங்கமே திகைத்து போய் நிற்பது!

ஆம்! பயங்கரமான காரணம்தான்!

முதலில் ஒரு என்ஜினீயர் வந்தார். கட்டுமான வேலையில் தீவிரமாக ஈடுபட்டார். மழை காலம் வருவதற்குள் வேகமாக

கட்டிவிட வேண்டும் என்பது அவர் நோக்கம்.

கட்டுமானப் பகுதி நடக்கும் இடத்திலேயே ஆஸ்பெஸ்டாஸ் போட்ட ஒரு ஷெட்டில் ஒரு அறையில் அந்த என்ஜினீயர் தங்கி இருந்தார்.

இன்னொரு ஜூனியர் என்ஜினீயரும் அங்கே தங்கி இருந்தார். அவருக்கு தனி அறை ஒதுக்கப்பட்டு இருந்தது.

டிரைவர் சின்னு, பியூன் பிச்சை ஆகியோர் இன்னொரு ஷெட்டில் தங்கி இருந்தார்கள். இவர்கள் எல்லோருமே வெளியூர்காரர்கள்தான். கட்டுமானம் முடியும்வரை அங்கிருப்பார்கள்.

மற்றபடி கட்டுமானத்துக்கு தேவையான ஆட்கள் எல்லோரும் காலையில் அங்கே வந்து போகும் லாரிகளில் வருவார்கள். மாலையில் அதே போல் லாரிகளில் திரும்பிவிடுவார்கள்.

என்ஜினியர், ஜூனியர் என்ஜினீயர், டிரைவர், பியூன் இவர்கள் நான்கு பேர்கள் மட்டும்தான் மேலே தங்கி இருந்தார்கள். காரணம் இவர்கள் வெளியூர்காரர்கள் என்பதால். இவர்களுக்கு வேண்டிய சாப்பாடு மற்ற பொருட்களை டிரைவர் ஜீப்பில் கீழே இறங்கி வந்து தூரத்தில் உள்ள ஒரு சிறிய ஊரில் இருக்கும் ஓட்டலிலும் கடைகளிலும் வாங்கிச் செல்வான்.

இந்த வாழ்க்கையில் உள்ள சிரமங்கள் காரணமாக, கட்டுமான வேலையை சீக்கிரம் முடித்துவிட்டு ஊர் திரும்பும் நோக்கத்தோடு அந்த என்ஜினீயர் கட்டுமான வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தபோது ஒருநாள்—

நள்ளிரவு 12 மணிக்கு அவர் பயங்கரமாக அலறினார்.

அவர் அலறல் அந்த மலைப் பிராந்தியத்தையே எதிரொலித்தது.

உதவி என்ஜினீயர், டிரைவர், பியூன் மூன்று பேர்களும் ஓடிவந்தார்கள்.

என்ஜினீயர் தனது அறையில்—

வேர்வையில் நனைந்துகொண்டு இருந்தார்—

அவர் உடல் முழுவதும் நடுங்கியது—

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது—

அவர் கழுத்தில் நகத்தால் பிராண்டியது போன்ற சிராய்ப்பு காயங்களில் இருந்து ரத்தம் லேசாக அரும்பு கட்டி இருந்தது—

அவரால் ஒன்றும் பேச முடியவில்லை—

தரையில் மல்லிகைப் பூக்கள் உதிர்ந்து கிடந்தன!

என்ன நடந்தது என்று அவர் சொல்லவில்லை; அவரால் சொல்ல முடியவில்லை!

பாவம்! மறுநாள் அவர் லீவு போட்டுவிட்டு சென்றவர் தான்! அதன்பிறகு அவர் வரவே இல்லை.

அணைக்கட்டு வேலை அத்துடன் நின்றுவிட்டது.

வேலை செய்பவர்களிடம் இது ஒரு பேச்சாகி ஒருவித பயம்

நிலவத் தொடங்கியது.

கொஞ்ச நாள் கழித்து இன்னொரு என்ஜினீயர் வந்தார். அவர் மிகவும் தைரியசாலி போல் பேசினார். எல்லோரையும் உற்சாகப்படுத்தி வேலை வாங்கினார். அணைகட்டும் வேலை மீண்டும் களை கட்டியது.

இதற்குமுன் இருந்த என்ஜினீயர் சுத்தப் பயந்தாங்கொள்ளி; இப்போது வந்திருப்பவர் தைரியசாலியான என்ஜினீயர் என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

ஒருநாள் காலை—

சின்னுவும் பிச்சையும் மலையின் ஒரு ஒதுக்குப்புறமான இடத்துக்கு போய்க்கொண்டு இருந்தார்கள்.

அப்போது—

இரண்டு பாறைகளுக்கு இடையில்—

அய்யோ! அந்த தைரியசாலியான என்ஜினீயர் பிணமாக கிடந்தார்!

அவர் கழுத்து கொடுமையாக நெரிக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லை என்றால் நாக்கு இப்படி வெளியே தள்ளுமா? இல்லை கண்விழிகள்தான் இப்படி பயங்கரமாக பிதுங்கி காணப் படுமா?

அலறவா? அடித்துப் புரண்டு ஓடவா? என்ன செய்ய?—சின்னுவும் பிச்சையும் திகைத்தார்கள்.

இருவர் முகத்திலும் இதுவரை இல்லாத பீதி! கலவரம்!

என்ஜினீயர் எப்படி செத்தார்? மர்மம்.

யார் கொன்றது? மர்மம்.

அந்த கோர கொலைக்குப் பிறகு, அணைகட்டும் வேலை மீண்டும் நின்றுவிட்டது.

என்ஜினீயர் மர்மக் கொலை பற்றி போலீசார் விசாரணை நடத்தினார்கள். ஏதோ முன் விரோதத்தில் என்ஜினீயர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று போலீசார் முடிவு செய் தார்கள்.

கொலை செய்தவர்களை அவர்கள் வலை வீசி தேடினார்கள்! தேடிக்கொண்டே இருக்கிறார்கள்!

நாட்கள் பல நழுவின.

பிறகு மூன்றாவது என்ஜினீயர் வந்தார்.

இவர் மிகவும் இளையவர். பதவி உயர்வு கிடைத்த வேகத் தில் உற்சாகமாக வந்தார். உற்சாகமாக வேலையில் ஈடுபட் டார்.

அணைக்கட்டும் வளரத் தொடங்கியது.

இதற்கு முன் நடந்த அசம்பாவிதம் காரணமாக மின்சார விளக்குகள் போடப்பட்டு இருந்தன. என்ஜினீயர் அறையில் போனும் வைக்கப்பட்டது. ஒரு இரவு காவல்காரரும் நியமிக்

கப்பட்டார்.

எந்தத் தடங்கலும் இல்லாமல் அணைக்கட்டு வேலை நடந்து கொண்டு இருக்கும்போது ஒருநாள்—

அன்று அமாவாசைக்கு மறுநாள்—

அறையில் என்ஜினீயரைக் காணவில்லை.

சுற்று முற்றும் தேடினார்கள். காணவில்லை.

அவர் காலையில் உலாத்தச் செல்லும் ஒத்தையடிப் பாதையில் நெடுந்தூரம் போய் பார்த்தார்கள். காணவில்லை.

அவர் குளிக்கும் ஓடைப் பக்கம் போய் பார்த்தார்கள்.

அங்கு—

அங்கு—

அவர் தண்ணீரில் மிதந்தார். நீச்சல் பழகிக்கொண்டிருக்கவில்லை! மூச்சில்லாமல் மிதந்தார். எப்படி செத்தார்?

கொலை! இரண்டாவது கொலை!

—இதைத் தாங்காமல் அந்தப் பிராந்தியம் நடுங்கியது.

எல்லோரிடமும் பீதி! பயம்!

மீண்டும் கட்டுமான வேலை நின்றுவிட்டது!

(இந்தக் கதையின் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்.)

சித்திரக் கதையை படித்துவிட்டு, உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்

முகவரி: "ராணி காமிக்ஸ்",
1091, பெரியார் நெடுஞ்சாலை,
சென்னை-600007.

நாலாவது பலி!

சமையல் செய்துகொண்டே பரபரப்புடன் படித்து முடித்த கதை. "நாலாவது பலி!"

—ஆர். லலிதா ஏழுமலை, சுங்குவார்சத்திரம்.

நூலன் கதாபாத்திரம் மனதைக் கவரும் வகையில் இருந்தது. மற்றபடி கதை சுமார்தான்!

—வி. சரவணன், செங்கல்பட்டு.

—கே. எஸ். பருவதக் கண்ணன், கொங்கல் நகரம்.

—எஸ். ஜார்ஜ் வில்லியம், கல்லணை.

—சந்திரன், சத்தியமங்கலம்.

தனக்கு கிடைத்த பரிசு பணத்தைக்கூட, தனது எஜமானர்

இல்ராய்க்கு கொடுக்க முன் வந்த நூலனின் நேர்மை பாராட்டத்தக்கது.

—ஆர். சுந்தரேசன், சிதம்பரம்–1.
—டி. ஜி. ராமச்சந்திரன், தேவன்பட்டு.
—கே. வெங்கட்ராமன், விருகம்பாக்கம்.

கள்ள நோட்டு ஒவ்வொருவராக பலி வாங்கிக்கொண்டே வந்ததை படிக்கும்போது "திரில்" ஆக இருந்தது. இந்த படக்கதை நல்ல படிப்பினையாகும்!

—பி. சசி வில்வம், அவினுசி.
—குலசை ஏ. பி. ஹாஜி, பம்பாய்–3.
—மகேந்திரன், எலத்தூர், (செட்டிபாளையம்)
—எம். சீனி, ராஜசிங்கமங்கலம்.

அறுதை நூலன் தன் நாடோடி வாழ்க்கையை திரும்பவும் தொடங்கிய கட்டம் கண்ணில் நீரை வரவழைத்தது.

—எம். செய்யது மஹபூப், மரக்காணம்.
—ஷேக் முக்தார், விழுப்புரம்.

ரவுடி ஜெயிலில் இருந்து தப்புவதும், குதிரை திருடுவதும், பிறகு பாலைவனத்தில் புயலில் பலியாவதும், ஆங்கில சினிமாப்பட ஜோர் தான், போங்கள்!

—ஜே. மோகன்ராஜ், திருப்பூர்.

நேர்மையும், வீரமும், நியாயமும் நிறைந்த நூலன் ஒரு எடுத்துக் காட்டு.

—கே. குழந்தைவேலு, நேமம்.
—நிஜாம்தீன், பள்ளப்பட்டி (கரூர்)

படங்களை பாராட்டியே தீரவேண்டும்.

—ஆர். பானு, கிருத்திகா, நாமக்கல்.
—வி. சங்கர்ராஜ், கொலபா, பம்பாய்–5.

அட்டைப் படத்தைக் கிழித்து சுவரில் ஒட்டிவிட்டேன். அத்தனை அழகு!

—ஜி. மாரியப்பன், மப்டேல், நீலகிரி.

ராணி காமிக்சை படிக்கும்முன் எங்கள் வீட்டில் ஒரு குட்டி கலாட்டாவே நடந்துவிடுகிறது!

—லட்சுமி, செங்குட்டுவன், வேலூர்.

"ராணி காமிக்ஸ்" படிக்க 15 நாட்கள், காத்திருப்பது கஷ்டமாக உள்ளது.

—பானு மணாளன், குளச்சல்.
டி. அளகேசன், கிளாம்பாக்கம்.
து. செந்தில்குமார், சிறுவயலூர்.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை படித்து பாதுகாக்க கூடிய இதழ் "ராணி காமிக்ஸ்."

வ. மூர்த்தி, ஸ்ரீராம்புரம், பெங்களூர்–21.

வார்த்தைப் பின்னல்

கீழே சில வார்த்தைகள் அல்லது வார்த்தை தொகுதிகள் கொடுக்கப்பட்டு உள்ளன. அந்த வார்த்தைகளை எழுதவேண்டிய கட்டங்கள் அதன் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன.

எத்தனை எழுத்துக்கள் உள்ளனவோ, அத்தனை எண்ணிக்கை உள்ள கட்டங்களில், எல்லா வார்த்தைகளையும், ஒன்று ஒன்றாக எழுதுங்கள். கடைசியில் எல்லா வார்த்தைகளும் பொருந்திய "வார்த்தைப் பின்னல்" கிடைக்கும். அது புதிய கட்டங்களின் வடிவமாகவும் அமையலாம்!

3 எழுத்து வார்த்தை
நேர்மை
தவலை
தருக
சுவர்
தடம்

4 எழுத்து
சிங்கம்
மாங்காய்
புரதம்
ஜாதகம்

5 எழுத்து
தட்டுகள்
சிறுதராசு

6 எழுத்து
தம்பி வாழ்க
நேர் வடக்கு
தேக்கு மரம்
சிறு தலைப்பு

7 எழுத்து
குரங்குப்பிடி
விடலை தேங்காய்

9 எழுத்து
சிமெண்ட் கட்டிடம்



(விடை: அடுத்த பக்கம்.)

முன் பக்க வார்த்தைப் பின்னல் புதிருக்கு விடை:—

	நே		வி							
நே	ர்	வ	ட	க்	கு					
	மை		லை				கு			
			தே	க்	கு	ம	ர	ம்		சி
			ங்				ங்			மெ
	சி		கா				கு			ண்
மா	ங்	கா	ய்				ப்			ட்
	க				த	ம்	பி	வா	ழ்	க
	ம்		சி		ட்		டி			ட்
			று		டு			சி		டி
			த	ரு	க			று		ட
	த	வ	ளை		ன்		ஜா	த	க	ம்
	ட		ப்					ரா		
	ம்		பு	ர	த	ம்		சு	வ	ர்

(1)

இரண்டு கரும்புள்ளிகளையும் சேர்த்துப் பாருங்கள். ஒரு பாத்திரம் வெளிப்படும்!





(2) மேலே உள்ள காருக்கும் கீழே உள்ள காருக்கும் 5 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்.

(3) இதில் மறைந்துள்ள மிருகத்தைக் கண்டுபிடியுங்கள்.

(1) டீ கெட்டில்

(2) கண்ணாடி பிடி; கதவின் கைப்பிடி; முன்பக்க சிறிய விளக்கு; முன் இருக்கை; சக்கர ரிம்.

(3) கங்காரு.

அடுத்த இதழில்...!

007 ஜேம்ஸ் பாண்ட்

துப்பறியும்,

மந்திரத் தீவு!

சித்ரா மணாளன் எழுதும்,

அலைக்கூட்டு கொலைகள்!

மர்ம **பேய்த்** தொடர்கதை!

——— படிக்கத் தவறாதீர்கள்! ———

1.11.84-ல் வெளிவருகிறது!

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

விண்ட்ஸர் பிஸ்கட்டு-எல்லோராலும் விரும்பப்படுவன

Marketing Agents: SESHADRI ASSOCIATES, P.O. Box No. 4916, MADRAS 600 0

RINTED AT RANI PRINTERS, MADRAS-7.